




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 20

# வடகிழக்கில் தொடரும் பொலிசாரின் அராஜகம், - பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை




இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தாமல் உண்ணா விரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், உயிர்நீத்த தியாகி திலீபனின் 34ஆவது நினைவேந்தலை முன்னிட்டு, அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முற்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் அவர்கள் நேற்றைய தினம் காவல்துறையினரால் அநாகரிகமான முறையில், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்று கூட கருதாமல் அவரது சிறப்புரிமைகளை மீறி இழுத்துச் செல்லப்பட்டு பொலிசாரின் வாகனத்தில் ஏற்றப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது. (03)

## வெளியாகியது சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள்

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியுள்ளது. இந்த பெறுபேறுகளை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும். உலகம் முழுவதும் பரவிய கொவிட் தொற்றால், இலங்கையின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இப்பரீட்சையின் பெறுபேறுகள் தாமதமாக வெளியிடப்பட்டுள்ளன.

## கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அபார வெற்றி

ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் லீக்கின் 34வது லீக் ஆட்டம் அபுதாபியில் நேற்று நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ்-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கெப்டன் மோர்கன் டொஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார். மும்பை இந்தியன்ஸ் அணியில் ரோகித் சர்மா இடம்பெற்றார். (03)



## சிறுவர் நோய் தொடர்பாக விசேட வைத்திய நிபுணர்கள் விடுத்துள்ள கோரிக்கை



கட்டுக்கதைகளுக்கு இரையாகாமல், தமது பிள்ளைகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் விடயத்தில் பின்வாங்காது செயற்படுமாறு, பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களிடம், விசேட வைத்திய நிபுணர்கள் கோரிக்கை விடுத்தனர்.

விசேட வைத்திய நிபுணர்களின் பரிந்துரைகளுக்கமையவே, உலகிலும் எமது நாட்டிலும், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அதனால், அந்த விடயத்தில் வீண் அச்சங்கொள்ளத் தேவையில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர்கள், சரியான புரிதலுடனும் அக்கறையுடனும், வெற்றிகரமான பயனை அடைந்துகொள்ளுமாறு தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஊடக மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகச் சந்திப்பு, நேற்று (23) முற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது. இதன்போது, சிறுவர் நோயியல் விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட குழுவொன்று இதில் கலந்துகொண்டு, "சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல்" தொடர்பில் கருத்துரைத்தது. (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## வெளியாகியது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொவிட் பரவல் நிலைமையால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டு வந்த நிலையில், நேற்று இரவு இப் பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சித்தியடைந்த மாணவ மாணவிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, இப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களே உங்களது எதிர்காலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகள். நீங்களும் இந்நாட்டின் எதிர்காலம் என்பதை நினைவிற் கொண்டு உங்களுக்கான வாய்ப்புக்கள் ஏராளமாக திறந்துவிடப்பட்டுள்ளது. எனவே துவண்டுவிடாதீர்கள். மனம் சோர்வடைந்து விடாதீர்கள். பெற்றோர்களே பிள்ளைகளைத் திட்டாதீர்கள். அவர்கள் கண்முன் உள்ள வாய்ப்புக்களை அவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களது எதிர்கால வாழ்வுக்காக அவர்களை இன்றே தயார்ப்படுத்துங்கள்.

இதே உத்வேகத்துடன் மீண்டும் கவனமாகப் படித்து, நீங்கள் கற்ற பாடசாலையிலே இன்னொரு முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு நீங்கள் தோற்ற முடியும் என்பது தெரியுமல்லவா உங்களுக்கு. நீங்களும் உயர் தரம் கற்க முடியும். கவலை எதற்கு?

அன்று போல் அல்ல மாணவர்களே இன்றைய உலகம். எதையெதையோ இணையங்களிலும் கைப்பேசிகளிலும் பார்த்தும், அரட்டையடித்துக்கொண்டும் இருக்கும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கிறது இன்று. நாட்டில் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஏராளமாக திறக்கப்பட்டுள்ளது. இலவசமாக பல பாடங்களை, உங்களுக்கு ஏற்ற பாடங்களை அங்கு நீங்கள் கற்க முடியும். அங்கிருந்தே நீங்கள் பட்டதாரிகளாக வெளியில் வர முடியும் என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்.

பெற்றோர்களே! உங்களது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் தான் அக்கறை கொள்ள வேண்டும். இம்முறை சித்தியடையவில்லை எனில், அடுத்த முறைக்கான தயார்ப்படுத்தல்களில் உங்களது பிள்ளைகளை ஊக்குவிக்கலாம். அதை விடுத்து போ வேலைக்கு என துன்புறுத்தாதீர்கள். கனவுகளைச் சுமப்பவர்கள் நீங்கள் மாத்திரமல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள். சித்தியடைந்த மாணவர்களே! உயர்தரம் நோக்கிப் பயணிக்கப்போகிறீர்கள். முன்பைவிட அதிகம் கவனமெடுக்கவேண்டிய தருணம் இது என்பதை நினைவிற் கொண்டு, உங்களால் கற்க முடிந்த துறையை தெரிந்து, அறிந்து தெரிவு செய்து, எதிர்காலத்தை சிறப்பிக்க இன்றே தயாராகுங்கள்.

## சிறைச்சாலை சம்பவம் குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி நியமனம்

அண்மையில் வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி சட்டத்தரணி, நீதி அமைச்சர் அலி சப்ரியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அப்போதைய சிறை நிர்வாகம் மற்றும் சிறை மறுவாழ்வுத்துறை இணை அமைச்சராக செயற்பட்ட லொஹான் ரத்வத்த வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு சென்று மேற்கொண்டதாக கூறப்படும் சர்ச்சைக்குரிய சம்பவங்களை விசாரிக்க இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## இன்றும் மழை பெய்யும் வாய்ப்பு - மக்களே அவதானம்

**நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை அடுத்த சில நாட்களில் (செப்டெம்பர் 25 ஆம் திகதியிலிருந்து) அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.**

**நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.**

**நாட்டில் மேலும் 72 கொவிட் மரணங்கள் நேற்று (23.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,448 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1368 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 510,040 ஆக அதிகரித்துள்ளது.**

## மாற்றுத் திறனாளிகளுக்கான வெகுசன ஊடக ஒருங்கிணைப்பு கேந்திர நிலையம் திறப்பு




வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் எண்ணக்கருவுக்கு அமைவாக, அரசாங்க தகவல் திணைக்கள வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான வெகுசன ஊடக ஒருங்கிணைப்பு கேந்திர நிலையம் வெகுசன ஊடக அமைச்சரின் தலைமையில், நேற்று (23) பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் அமைப்புகளின் ஒன்றிணைந்த முன்னணியின் பிரதிநிதிகளால் இக்கேந்திர நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இக்கேந்திர நிலையத்தினை உருவாக்குவதற்கான அடிப்படை காரணமாக அமைந்தது, இலங்கையில் மாற்றுத் திறனாளிகளின் விசேட தேவைகளை துரிதமாக, எவ்வித தடையுமின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியமான வசதிகளை செய்து கொடுக்கும் நோக்கிலேயாகும். அதற்கு நிகராக மாற்றுத்திறனுடைய பிரஜைகளின் தொடர்பாடல் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் தயாரிக்கப்பட்ட விசேட அப்லிகேஷன் (APP) ஒன்றும் இதன் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் உரை நிகழ்த்திய வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இன்றைய தினத்திற்கு இலங்கை வரலாற்றில் புதியதொரு அர்த்தம் கிடைத்துள்ளதாக தெரிவித்தார். சர்வதேச சைகைகள் மொழி தினமான (செப்டெம்பர் 23) இலங்கையில் அங்கவீனமடைந்துள்ள சகோதர பிரஜைகளுக்காக இதுவரை கிடைக்காத உரிமைகளை பெற்றுக் கொடுக்கும் செயன்முறையில் ஓர் திருப்புமுனையாக இதனை குறிப்பிட முடியும் என அமைச்சர் தெரிவித்தார். கொழும்பு 05, பொல்ஹேன்கொடை, கிருலப்பனை மாவத்தையில், இலக்கம் 163, அரசாங்க தகவல் திணைக்கள ஊடக மத்திய நிலைய கட்டிடத்தின் கீழ் மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஊடக கேந்திர நிலையமானது மாற்றுத்திறன் கொண்டோர்களின் தேவைகளை இனங்கண்டு உரிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

## அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

புதிதாக நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவே குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ராலை நியமித்தமையை சவாலுக்கு உட்படுத்தியும், அப்பதவியில் இருந்து அவரை உடனடியாக நீக்குமாறு கோரியே இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சி.வி.கே.சிவஞானம் அவர்களின் நேர்காணல்...

(நேற்றைய இதழில் வெளியான நேர்காணலின் தொடர்ச்சி...)

**கேள்வி :** எவ்வாறு அதனை நிவர்த்தி செய்துகொள்ளலாம்?

**பதில் :** தற்பொழுது மக்கள் இதனை ஒரு படிமுறையாக செய்திருக்கவேண்டும். அது பிழையில்லை செய்யலாம். திடீரென அவ்வாறு செய்யும்பொழுது நான் நினைக்கின்றேன் எந்த இலக்கை கொண்டு அசேதன பசளைகளின் இறக்குமதிகளை இந்த அரசாங்கம் நிறுத்தியதோ அதனால் இங்கு இருக்கும் விவசாய உற்பத்திகள் நலிந்துபோகின்ற நிலை ஏற்படும்.

**கேள்வி :** ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலப்பகுதியிலும் இவ்வாறான ஒரு பொருளாதார தடையை இலங்கை எதிர்கொண்டமை குறித்து?

**பதில் :** அந்த பொருளாதார தடை எங்களுடைய சுய பொருளாதாரத்தை சுய சார்பை வளர்க்ககூடிய விதமான ஒரு செயற்பாடு. அது வரவேற்கக்கூடியது. ஏனென்றால் அவர்கள் இங்கிருக்கின்ற சுய உற்பத்திகளை ஊக்கப்படுத்துவதற்கான செயற்பாடாகத்தான் இருந்தது. ஆரம்ப கட்டத்திலே நாங்கள் கூட பாண் வாங்குவதற்கு வரிசையில் நின்ற காலமும் இருக்கின்றது. அவ்வாறு பல உற்பத்திகள் எங்களது நாட்டிலே மேற்கொள்ளப்பட்டது. மரவள்ளிக்கிழங்கு எல்லாம் உண்கிற காலமும் இருந்தது தானே.

அதேநேரம் அதே காலத்தில் விவசாய உற்பத்தி. மிளகாய் உற்பத்தி போன்ற எங்களுடைய விவசாய உற்பத்திகள் கொஞ்ச நாட்களுக்கு இருந்தது. வட பகுதியை எடுத்துக்கொண்டாலே எங்களது விவசாயிகள் பொருளாதார ரீதியிலே உயர்வதற்கான காரணமாக அப்பொழுது அந்த பொருளாதார அனுகுமுறையும் இருந்தது. ஆனால் எங்களுடைய உள்ளூர் உற்பத்தியை வளப்படுத்துவதற் கான செயற்பாடாகவே அது இருந்தது. ஆனால் தற்போதைய இந்த அனுகுமுறை அவ்வாறானதல்ல. பசளைகளின் இறக்குமதிகளை தடை செய்வதனால் எங்களுடைய விவசாய பொருட்கள் குறிப்பாக நெல் உற்பத்திகள் போன்றவற்றின் நலிவு இறுதியாக அந்த பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இந்த அரசாங்கத்திற்கு வரப்போகின்றது.

ஆகவே இது நல்ல முடிவு தான் ஆனால் தீர்க்கமாக ஆராய்ந்து இந்த முடிவை படிப்படியாக எடுத்திருக்க வேண்டும். அது இந்த நாட்டிற்கு சுய சார்புக்கு மக்களுடைய வாழ்க்கை தரத்திற்கு குறிப்பாக ஆரோக்கியமான வாழ்வுக்கு நிச்சய மாக இரசாயன பசளைகள் பாவனைகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆகவே எத்தனையோ புற்றுநோய் நோயாளிகள். கிட்னி நோயாளிகள். நீரிழிவு நோயாளிகள் என பலர் இன்று அதிகரித்துள்ளனர். ஆனால் உடனடியாக இந்த முடிவை அமுல்படுத்தும் போது இன்று நாங்கள் பல பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டி வரப்போகின்றது.

**கேள்வி :** நீங்கள் வட மாகாணசபையின் முன்னாள் அவைத் தலைவர் என்ற ரீதியிலே இந்த கேள்வியினை உங்களிடம் கேட்பது சாலச்சிறந்தது என்று நினைக்கின்றேன். அதாவது இன்று மாகாணசபை இயக்கப்படாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி தேர்தல் கூட மிக இக்கட்டான கொரோனா கால கட்டத்தில் தான் இடம்பெற்றது. ஆனால் இந்த மாகாணசபைகள் செயலிழந்த சூழ்நிலையில் இருக்கின்றது. அரசின் இந்த இழுத்தடிப்புக்கு உண்மையான காரணம் என்ன?

**பதில் :** இதிலொரு பெரிய பிரச்சினை இருக்கின்றது. எப்பொழுதுமே மத்திக்கும் பிராந்தியங்களுக்கும் இடையில் அதிகார பகிர்வு என்று வரும்பொழுது முரண்பாடு எப்பொழுதுமே எந்த நாடுகளிலுமே இருக்கும். இந்த அரசாங்கத்தில்கூட பாராளுமன்றத்தில் கிட்டத்தட்ட 40 பேரிற்கு மேல் மாகாணசபைக்குள் இருந்தவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களும் தற்பொழுது அதிகாரம் மத்தியிலே இருக்க வேண்டும் என்று தான் அவர்கள் அதற்கும் ஆதரவாக இருக்கின்றார்கள். அதிகார வெறித்தன்மை மத்தியை மயப்படுத்தப்பட்டு தான் இருக்கும் எப்பொழுதும். எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்களது ஆட்களையும் சேர்த்து தான் சொல்கின்றேன் அவர்களுக்கு மாகாணசபை இருப்பது பெரிதும் விருப்பம் வராது.

ஏனென்றால் அவர்களின் அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சம் குறையும். ஆகவே அது பகிரப்படுவதை அவர்கள் விரும்புவது இல்லை. இதுதான் யதார்த்தம். தமிழர்கள். சிங்களவர்களை சேர்த்து தான் கூறுகின்றேன். அவர்கள் அந்த அதிகாரங்களை மாகாணசபைகளில் கொஞ்சம் கொஞ்சம் போவதை விரும்பவில்லை. அந்த விருப்பம் இல்லாததும் ஒரு காரணமாகத்தான். மற்றும் அமைச்சர்களும் அந்த அமைச்சுக்கு வந்தவுடன் முழுதையும் தாங்கள் தான் கையாள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்த பிரச்சினையை நாங்கள் கடந்த மாகாணசபை காலத்திலே எதிர்கொண்டு இருக்கின்றோம். லைன் மினிஸ்ரி என்று சொல்லக்கூடிய நேர் நிரல் அமைச்சுக்கள் குறிப்பாக விவசாய துறை போன்றவர்கள் நேரடியாகவே கையாள ஆரம்பித்துவிட்டார்கள் தங்களுடைய திணைக்களங்கள் மூலமாக மாகாணசபையை புறம்தள்ளி. ஆகவே அப்படியான அதிகார மத்திய மயப்படுத்தல் எண்ணப்பாடு இருக்கிறதும் இந்த மாகாணசபை தேர்தலை அவர்கள் பிற்போட்டதற்கான காரணமாக இருக்கின்றது மற்றும் தற்போதைய கொரோனா வைரஸினுடைய தாக்கத்தின் காரணமாகவும் பிற்போடப்பட்டு இருக்கலாம்.

**- (தொடரும்)** **நேர்காணல் – இரணியன்**

## வடகிழக்கில் தொடரும்...

வடகிழக்குப் பகுதிகளில் அதுவும் தமிழர்களின் விடயங்களில் பொலிசார் அன்றிலிருந்து இன்றுவரை ஜனநாயகத்திற்கு முரணாகவே செயற்பட்டு வருகின்றனர். தமிழர் பிரதேசங்களை அபகரிப்பதிலும். வடகிழக்கில் பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் பௌத்த பிக்குகளுடன் உறுதுணையாக நிற்கும் இப் பொலிசார். ஒரு பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு செயற்பட்டிருந்தால் அவரை இழுத்துச்சென்று வாகனத்தில் ஏற்றியிருக்கமாட்டார்கள். அதற்கு தயக்கம் காட்டி. அவரது வாகனத்திலே பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பணித்திருப்பார்கள். இந்த நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமம் என்று கூற முடியாது என்பது. பொலிசாரின் செயற்பாடுகளை வைத்தே அறிந்துகொள்ள முடிகிறது.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் திகதி.
மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.
என்கிற ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து 11 நாட்களுக்கு பின்னர் உயிர் நீத்தார். இதையடுத்து. வருடாந்தம் செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் 11 நாட்கள் திலீபனின் நினைவேந்தல் வாரம் வட கிழக்கிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அரசின் தடைகளைக் கடந்தே ஒவ்வொரு வருடமும் இவ் நிகழ்வுகள் வழமையாக இடம்பெறும்.

இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படும் என்பதை ஏற்கனவே ஊகித்துக்கொண்ட பொலிசார். இன்று தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் என்கிற பெயரில் அத்தியாவசியப் பொருட்களை பின் கதவாலும். மதுபானங்களை முன் கதவாலும் வாங்கிக்கொண்டிருக்கும் மக்களுக்கு மத்தியில். நாடு முழுவதும் நடமாட்டங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில். தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் உட்பட்ட ஏனையவர்கள் கைது செய்யப்பட்டதாக கதை கூறியிருக்கிறார்கள். பின்னர் கைதான அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் நோய் தொடர்பாக...

கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில். இன்று (24) முதல். நாள்பட்ட நோய்களையுடைய சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கவுள்ளன என்று தெரிவித்த சிறுவர் நோயியல் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய. அறிவாற்றல் குறைந்த. நீரிழிவு. நரம்பியல் நோய்கள். சிறுநீரகப் பாதிப்பு. இதய நோய். தலசீமியா. சிறுநீர் மற்றும் உணவுக்குழாய்ப் பாதிப்புகள் உள்ளிட்ட நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை. இந்தத் தடுப்பூசி ஏற்றலுக்காக அழைத்து வருமாறு. பெற்றோருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த சிறுவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்படும் சிகிச்சையகங்களுக்கு (க்ளினிக்) வருகை தருவதால். அங்குள்ள விசேட வைத்திய நிபுணரின் பரிந்துரைக்கமைய. பெற்றோரின் அனுமதியுடன். அந்தச் சிறுவர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும். டொக்டர் பாதெனிய குறிப்பிட்டார். எதிர்வரும் நாட்களில். நாட்டின் அனைத்து மாகாண. மாவட்ட மற்றும் ஆதார வைத்தியசாலைகளிலும். சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலுக்குரிய திட்டமிடல்கள். விசேட வைத்திய நிபுணர்களின் பரிந்துரைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று. சிறுவர் நோயியல் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் குழாம் தெரிவித்தது.

சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலானது. மூன்று படிமுறைகளின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி. 12 - 19 வயதுக்கிடைப்பட்ட நாள்பட்ட நோய்களுடைய சிறுவர்களுக்கு முதற்கட்டத் தடுப்பூசி ஏற்றல் இடம்பெறும். 15 - 19 வயதுக்கிடைப்பட்ட ஆரோக்கியமான சிறுவர்களுக்கு. அடுத்தகட்டமாகத் தடுப்பூசி ஏற்றப்படும். இந்நடவடிக்கை. வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன். 12 - 15 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம். மூன்றாவது படிமுறையாக. விசேட வைத்திய நிபுணர்களின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றவுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது என. வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். தெற்காசியாவில். அபிவிருத்தியடைந்த சுகாதாரக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் இலங்கை. தடுப்பூசி ஏற்றலில் விசேட அனுபவத்தைக் கொண்டிருப்பதாகவும் அதனால் அச்சமின்றியும் சந்தேகமின்றியும். தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வருமாறு. வடமேல் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் சம்பத் இந்திக குமார. பெற்றோர்களிடம் தெரிவித்தார்.

## கொல்கத்தா நைட் ரைடர்ஸ்...

அந்த அணியின் டி கொக் உடன் ரோகித் சர்மா தொடக்க வீரராக களம் இறங்கினார். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் ஸ்கோர் ஜெட் வேகத்தில் உயர்ந்தது. ரோகித் சர்மா 30 பந்தில் 33 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அப்போது மும்பை இந்தியன்ஸ் 9.2 ஓவரில் 78 ரன்கள் எடுத்திருந்தது. அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் 5 ரன்னில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய டி கொக் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 42 பந்தில் 4 பவுண்டரி. 3 சிக்சருடன் 55 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அதன்பின். 156 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் வெங்கடேஷ் அய்யர். கில் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். வெங்கடேஷ் அய்யர் சந்தித்த முதல் பந்தையே சிக்சருக்கு தூக்கினார். தொடர்ந்து அவர் ருத்ரதாண்டவம் ஆடினார். சிறப்பாக விளையாடிய வெங்கடேஷ் அய்யர் 25 பந்தில் அரைசதம் அடித்தார். மறுமுனையில் திரிபாதி 29 பந்தில் அரைசதம் அடித்தார். இறுதியில். கொல்கத்தா 3 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ராகுல் திரிபாதி 73 ரன்னில் அவுட்டாகாமல் இருந்தார்.

## சாமுவேல் மீது ஊழல் தடுப்புப் பிரிவின் கீழ் குற்றச்சாட்டு




வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் வீரர் மார்லோன் சாமுவேல்ஸ், வெஸ்ட் இண்டீஸ் அணி இரண்டு முறை டி20 உலகக் கோப்பையை கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். அவர் எமிரேட்ஸ் கிரிக்கெட் போர்ட் நடத்திய டி10 கிரிக்கெட் தொடரில் விளையாடினார். அப்போது 750 அமெரி க்க டொலர் அளவிலான விருந்தோம்பல் ரசீதை மறைத்ததாக சாமுவேல்ஸ் மீது எமிரேட்ஸ் கிரிக்கெட் போர்ட் ஐசிசியிடம் புகார் தெரிவித்தது.

அதனடிப்படையில் 750 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேல் கொண்ட ரசீதை மறைத்தல், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை, தகவலை மறைப்பதன் மூலம் விசாரணைக்கு தடை அல்லது தாமதம் செய்வது என நான்கு ஊழல் தடுப்பு பிரிவின் கீழ் ஐசிசி குற்றம்சாட்டியுள்ளது. கடந்த 21ஆம் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்குமாறு சாமுவேல்ஸ்க்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## சீன கைப்பேசிகள் குறித்து லிதுவேனியா எச்சரிக்கை




வடக்கு ஐரோப்பிய நாடான லிதுவேனியாவின் பாதுகாப்பு அமைச்சகம், சீன நாட்டின் ஜியோமி மற்றும் ஹுவாவே 5ஜி அலைபேசிகளில் தகவல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதால் புதிய சீன அலைபேசிகளை வாங்க வேண்டாம், பழைய சீன அலைபேசிகளையும் எவ்வளவு விரைவாக தூக்கி எறிய முடியுமோ எறிந்துவிடுங்கள் என கூறியுள்ளது.

இது தொடர்பாக லிதுவேனியாவின் தேசிய சைபர் பாதுகாப்பு மையம் சீன 5ஜி அலைபேசிகளை ஆராய்ந்து தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது, ஜியோமியின் எம்.ஐ., 10டி 5ஜி அலைபேசியில் திபெத் விடுதலை, வாழ்க தைவான் சுதந்திரம், ஜனநாயக இயக்கம் போன்ற வார்த்தைகளை கண்டறிந்து தணிக்கை செய்யும் மென்பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. ஜியோமியில் நிறுவப்பட்டுள்ள பிரவுசர் செயலி உட்பட பல செயலிகள் இது போன்று 449 வார்த்தைகளை கண்டறிந்து தணிக்கை செய்யக்கூடியதாக உள்ளது. ஐரோப்பிய மொடல்களில் அந்த தணிக்கை அணைக்கப்பட்டுள்ளது. ஆனால் எப்போது வேண்டுமானாலும் எங்கிருந்தும் செயல்படுத்தக் கூடியதாக உள்ளது.

ஜியோமி அலைபேசி என்க்ரிப்ட் செய்யப்பட்ட அலைபேசியின் பயன்பாட்டு தகவலை சிங்கப்பூருக்கு மாற்றுகிறது. இது லிதுவேனியா நாட்டிற்கு மட்டுமல்ல ஜியோமி சாதனத்தை பயன்படுத்தும் அனைத்து நாடுகளும் கவனிக்க வேண்டியது. அதேபோல் சீன நிறுவனமான ஹுவாவேயின் பி40 5ஜி அலைபேசியில் சைபர் பாதுகாப்பு மீறப்படும் அபாயம் உள்ளது. பிளே ஸ்டோர் போன்று அதிலுள்ள அப்கெலரி, பயனர்களை மூன்றாம் நபர்களின் இ-கொமர்ஸ் தளத்திற்கு மாற்றுகிறது. அது ஆபத்தான வைரஸ்களை கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது. ஒன்பிளஸின் 5ஜி மொடலும் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் அதில் எந்த பிரச்சினையும் இல்லை எனக் கூறியுள்ளனர். இந்த அறிக்கைக்கு ஜியோமி நிறுவனம் தரப்பில் இதுவரை விளக்கம் ஏதும் வெளியாகவில்லை. ஹுவாவே நிறுவனம் மட்டும் தாங்கள் தொழில் செய்யும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டே செயற்படுவதாக கூறியுள்ளது. சைபர் பாதுகாப்பு மற்றும் பிரைவசிக்கு முன்னுரிமை தரப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். "ஹவாய் அலைபேசிக்கு வெளியே எந்த தரவுகளும் கையாளப்படுவதில்லை. 'அப் கெலரி' மற்ற அப் ஸ்டோர்களைப் போலவே செயலிகளை தேடுவதற்கும், நிறுவுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் தேவையான தரவை மட்டுமே சேகரித்து கையாள்கிறது." என கூறியுள்ளனர்.

## ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்கு 97,831 வேட்பு மனுக்கள் தாக்கல்

சென்னை ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்கு 97,831 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தமிழக தேர்தல் ஆணையம் நேற்று தெரிவித்துள்ளது. வேலூர் திருநெல்வேலி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை, தென்காசி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பத்தூர் ஆகிய 9 மாவட்டங்களுக்கு வரும் ஒக்டோபர் 6 மற்றும் 9 ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளது.

அதேபோன்று, ஏற்கெனவே ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்ற 28 மாவட்டங்களில் காலியாக உள்ள இடங்களுக்கான தேர்தல் ஒக்டோபர் 9ம் திகதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடுவதற்காக செப்டம்பர் 15 முதல் நேற்று முன்தினம் வரை வேட்புமனு தாக்கல் நடைபெற்றது. வேட்புமனு தாக்கல் குறித்து தமிழக தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், தமிழகத்தில் 9 மாவட்டங்களில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்கு மொத்தம் 97,831 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வேட்புமனுக்கள் விபரம்: கிராம ஊராட்சித் தலைவர் - 15,967, கிராம ஊராட்சி வோர்ட் உறுப்பினர் - 72,071, மாவட்ட ஊராட்சி வோர்ட் உறுப்பினர் - 1,122, ஊராட்சி ஒன்றிய வோர்ட் உறுப்பினர் - 8,671. மொத்தம் 97,831 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வேட்புமனுக்கள் குறித்த பரிசீலனை நேற்றிலிருந்து நடைபெறுகிறது.




## காற்று மாசு அதிகரிப்பால் மரணங்களின் எண்ணிக்கை உயர்வு

காற்று மாசுபாடு காரணமாக உலகளவில் அதிகரித்து வரும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் காற்று மாசுபாடு காரணமாக உலகம் முழுவதும் 70 லட்சம் பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

இதையடுத்து காற்றில் கலந்துள்ள மாசுபாட்டினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்கும் விதமாக 2005ம் ஆண்டிற்கு பிறகு காற்று மாசினை குறைப்பதற்கான வழிகாட்டுதலை WHO வெளியிட்டிருக்கிறது.

அதன்படி 194 உறுப்பு நாடுகளுக்கு ஆலோசனை வழங்கியிருக்கும் இந்நிறுவனம், எரிபொருள் பயன்பாட்டால் காற்றில் கலந்துள்ள நச்சு துகள்கள் மற்றும் நைட்ரஜன் டை ஒக்சைட் ஆகியவற்றின் முந்தைய பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச அளவை மேலும் குறைத்திருக்கிறது.

அத்துடன் மாசு காற்றில் கலந்துள்ள நச்சு துகள்கள் நைட்ரஜன் டை ஒக்சைட், சல்பர் டை ஒக்சைட் ஆகியவற்றை சுவாசிப்பதால் இதயம், நுரையீரல், நரம்பு மண்டலம் ஆகியவற்றின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு மரணங்களின் விகிதம் அதிகரித்து வருவதாக WHO எச்சரித்துள்ளது.

புதிய வழிகாட்டுதலின் கீழ் பி.எம்.2.5 நிலைக்கான பரிந்துரைக்கப்பட்ட வரம்பை ஒரு கன மீட்டருக்கு 10 மைக்ரோ கிராமில் இருந்து 5 மைக்ரோ கிராமாக WHO குறைத்திருக்கிறது. மேலும் பி.எம்.10 இற்கான பரிந்துரைக்கப்பட்ட வரம்பு, 20 மைக்ரோ கிராமில் இருந்து 15 மைக்ரோ கிராமாக குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நகரமயமாக்கல் மற்றும் பொருளாதார வளர்ச்சி எதிரொலியாக பெட்ரோல், டீசல் பயன்பாடு அதிகரித்து வருவதால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் வாழும் மக்கள் காற்று மாசினால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக WHO இன் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

